சோலார் மின்சாரம்
கனரக தொழிற்சாலைகள், டையிங், நூல் மில்களுக்கு தேவையான சோலார் மின்சாரம் குறைந்த விலையில் சப்ளை செய்கிறோம்
தொடர்புக்கு
96005 48581

நல்லவே எண்ணல் வேண்டும்.., எண்ணிய முடிதல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

தினசரி "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" புலனாய்வு நாளிதழ்
www.SAKKRAVIYUGAM.com

TAMIL PRESS CLUB
தமிழ் பிரஸ் கிளப்
Reg.No: 12/2013
தமிழ்நாடு, பாண்டிச்சேரியில் சிறப்பாக செயல்பட்டு வரும் பொது நல அமைப்பிற்கு 2026 ஆம் ஆண்டு உறுப்பினர் சேர்க்கை அனைத்து மாவட்டங்களிலும் ஆரம்பம்...
ஆர்வமுள்ளவர்கள் அமைப்பாளராக இணைந்திட
88705 00000
99 44 616 559

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 ISSUE: 179 23.12.2025 TUESDAY MARGAZHI : 8 PRICE : RS.5/-
மலர் : 01 இதழ் : 179 23.12.2025 செவ்வாய்கிழமை மார்கழி : 8 விலை : ரூ.5/-

3 சிவகங்கை அரசு பள்ளிகளில் 10 மாதங்களாக இயங்காத ஸ்மார்ட் வகுப்பறை

4 புதிதாக சிங்காரக்கோட்டை ஊராட்சியை வழங்கியதற்காக கிராம மக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி

2 சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம்: விஜய்

# இனிதான் நம் முழு பலத்தையும் கொடுத்து ஓடவேண்டும்: திமுக நிர்வாகிகளுக்கு ஸ்டாலின் அறிவுறுத்தல்

சென்னை: டிச.23-

வெற்றியை நெருங்கும் நேரத்தில் பதற்றமோ, அசதியோ கூடாது. இனிதான் நம் முழு பலத்தையும் கொடுத்து ஓடவேண்டும் என்று திமுக மாவட்டச் செயலாளர்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

வரைவு வாக்காளர் பட்டியல் சரிபார்த்தல் குறித்த திமுக மாவட்டச் செயலாளர்கள் கூட்டம், காணொலி வாயிலாக நேற்று நடைபெற்றது. இதில் திமுக தலைவரும், முதல்வருமான மு.க.ஸ்டாலின் பேசியதாவது: தமிழகத்தில் எஸ்ஐஆர் பணிகளை அவசரகதியில் ஆரம்பித்தபோதே இது பல்வேறு முறைகேடுகளுக்கு வழிவகுக்கும். தகுதியான வாக்காளர்கள் நீக்கப்பட வாய்ப்புள்ளது என்று எச்சரித்தோம்.

உச்ச நீதிமன்றத்திலும் வழக்கு தொடுத்தோம். அதன்படியே, எஸ்ஐஆர் மூலம் 15 சதவீதம் பேர், அதாவது 97 லட்சம் வாக்காளர்களை நீக்கி, வரைவுப் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது. இடம் பெயர்ந்தவர்கள் என்று மட்டும் சுமார் 66 லட்சம் பேரை நீக்கியுள்ளனர்.

குறிப்பாக 168 தொகுதிகளில் 10 சதவீதத்துக்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். இதை நாம் வாக்குச்சாவடி வாரியாக சரிபார்க்க வேண்டும். உதாரணமாக கும்மிடிப்பூண்டியில் முதல் வாக்குச்சாவடியில் 40 வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளனர். அதில் 4 பேர் ஓரணியில் தமிழ்நாடு முன்னெடுப்பு மூலமாக சேர்ந்தவர்கள்.



அதில் ஒருவர் இறந்து விட்டதாக கூறியுள்ளனர். அதேபோல், மற்ற 3 பேரையும் எதற்காக நீக்கினர் என்று சரிபார்க்க வேண்டும். நாம் களத்தில் முழுமையாக இறங்கி பணி செய்கிறோம்.

மறுபுறம் அதிமுகவும், பாஜகவும் களத்துக்கே வரவில்லை. அதனால்தான் நாம் சந்தேகப்பட வேண்டியுள்ளது. எனவே, நீக்கப்பட்டதில் நம் வாக்காளர்கள் இருக்கிறார்களா என கவனமாக பார்க்க வேண்டும்.

நான் வாக்குச்சாவடி வாரியாக உன்னிப்பாக கவனித்து வருகிறேன். ஒரே ஒருத்தர் தவறுதலாக விடுபட்டு இருந்தால்கூட வாக்காளர் பட்டியலில் இணைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இது அனைத்து மாவட்டச் செயலாளர்கள், தொகுதி பார்வையாளர்களின் பொறுப்பாகும்.

ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நீக்கப்பட்டவர்கள் பட்டியலும் அதில் யாரெல்லாம் ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர்கள் என்ற விவரமும் இன்றைக்குள் (டிசம்பர் 22) மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விவரங்களை முழுமையாக சரிபார்த்து விடுபடல் இல்லாதவாறு பார்த்துக்கொள்ள வேண்டும். மேலும், புதிய வாக்காளர்கள் சேர்க்கப் படுவதையும் கவனிக்க வேண்டும். போலிகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

இதுதவிர, வாக்குச்சாவடிகளின் எண்ணிக்கை 75,032 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. பூத் எண் மட்டும் மாறிய வாக்குச்சாவடிகளுக்கு, ஏற்கெனவே நியமிக்கப்பட்டுள்ள பிஎல்ஏ 2க்கள் தொடர வேண்டும். புதிதாக உருவாக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளுக்கு புதிய பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும். நம்மை நேர்வழியில் வீழ்த்த முடியாத எதிரிகள் குறுக்கு வழியில் காரியம் சாதிக்க நினைப்பார்கள். அதற்கு கடுகளவுகூட இடம் தரக்கூடாது.

வெற்றியை நெருங்கும் நேரத்தில் பதற்றமோ, அசதியோ கூடாது. இனிதான் நம் முழு பலத்தையும் கொடுத்து ஓடவேண்டும். களத்தில் நாம்தான் வலிமையாக உள்ளோம். நம் கூட்டணிதான் வெற்றிக் கூட்டணி. வெற்றியை எட்டும் வரை கவனம் சிதறாமல் உழையுங்கள். இவ்வாறு அவர் பேசினார்.



## உலக கோப்பை ஸ்கேட்டிங் ரோல்பால் போட்டியில் உலக சாதனை படைத்து விளையாட்டு வீரர்களை அமைச்சர் ஐ.பெரியசாமி பாராட்டி வாழ்த்து

சின்னாளபட்டி, டிச.23

உலக கோப்பை ஸ்கேட்டிங் ரோல்பால் போட்டியில் உலக சாதனை படைத்து விளையாட்டு வீரர்களை ஊரகவளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பாராட்டி வாழ்;த்தினார். சாதனை படைத்த விளையாட்டு வீரர்களை ரோல்பால் ஸ்கேட்டிங் வீரர்கள் ஊர்வலமாக மேளதாளம் முழங்க சின்னாளபட்டி நகர் முழுவதும் அழைத்து வந்தனர்.

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி இராஜன் உள்விளையாட்டு அரங்கத்தில் பயிற்சியாளர் மாஸ்டர் எம்.பிரேம்நாத் அவர்களிடம் பயிற்சி பெற்ற ஸ்கேட்டிங் ரோல்பால் விளையாட்டு வீரர்களான மாணவர் தீபக் ராஜா, மாணவி மது நிதா ஆகியோர் துபாயில் நடைபெற்ற 7வது உலகக்கோப்பை ரோல்பால் போட்டியில் இந்திய அணி சார்பாக பங்கேற்றனர். ஸ்கேட்டிங் ரோல் பால் உலகக் கோப்பை போட்டியில் இந்திய ஆண்கள் அணி கென்யாவை 11 : 10 என்ற விகிதத்தில் வீழ்த்தி தங்கப் பதக்கத்தை தக்க வைத்தது. இதுபோல பெண்கள் அணி 3:2 என்ற விகிதத்தில் கென்யாவை வீழ்த்தி தங்கப் பதக்கத்தை பெற்றது. இந்த இரு அணிகளிலும் விளையாடிய விளையாட்டு வீரர்கள் தங்கப்பதக்கத்தை பெற்றது தமிழகத்திற்கு பெருமை சேர்த்துள்ளது.

இதுபோல துபாயில் நடைபெற்ற ஆசிய அளவிலான டேக்வாண்டோ போட்டியில் மாஸ்டர் எம்.பிரேம்நாத்திரம் பயிற்சி பெற்ற மாணவி லின்சியா வெண்கல பதக்கம் பெற்று சாதனை படைத்தார். வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கான பாராட்டு விழாவில் அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டு, வெற்றிபெற்ற வீரர்களுக்கு மாலை அணிவித்து வாழ்த்து தெரிவித்து பேசுகையில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்ற பின்பு கடந்த 4 வருடங்களாக தமிழக விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்து வருகிறார்கள். இன்று சின்னாளபட்டியைச் சேர்ந்த விளையாட்டு வீரர்கள் உலக அளவில் சாதனை படைத்துள்ளது பாராட்டுக்குரியது என்றதோடு பயிற்சியாளர் மாஸ்டர் எம்.பிரேம்நாத்தை வாழ்த்தினார். அதன் பின்னர் விளையாட்டு வீரர்களுக்கு பாராட்டு தெரிவிக்கும் வண்ணம் ரோல்பால் ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்கள் நூறு பேர் பரிசுக்கோப்பையுடன் ஊர்வலமாக சின்னாளபட்டி நகர் முழுவதும் அழைத்து வந்தனர். நிகழ்ச்சியில் திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், தென்னிந்திய ரோல்பால் ஸ்கேட்டிங் செயலாளர் சுப்பிரமணியன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் டி.ஜெயராம், ஊர் முக்கிய பிரமுகர்கள் மணவாளன், நாகரமேஷ், ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக கிளைச் செயலாளர் எம்.சி.பாண்டியன், ஒன்றிய மாணவரணி துணை அமைப்பாளர் மெல்வின், சின்னாளபட்டி பேரூராட்சி மன்ற துணைத்தலைவர் ஆனந்திபாரதிராஜா, திமுக நிர்வாகிகள், ரோல்பால் ஸ்கேட்டிங் விளையாட்டு வீரர்களின் பெற்றோர்கள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

விளம்பரம் மற்றும் செய்திகள்
தொடர்புக்கு : 88705 00000

## எடப்பாடி பழனிசாமியின் அறிவிப்பால்...

## பெரம்பலூர் மாவட்ட செயலாளர் அப்செட்!

பெரம்பலூர், டிச.23-

தமிழகத்தில் சட்ட மன்ற தேர்தல் விரைவில் வர உள்ள நிலையில், அனைத்து அரசியல் கட்சிகளும் பரபரப்பாகியுள்ளன.



தமிழகத்தை பொறுத்த வரையில் அதிமுக மட்டும் தான் விருப்ப மனு அறிப்பை கடந்த 15ம் தேதி அறிவித்துள்ளது. அதன்படி டிசம்பர் 15ம் தேதி முதல் டிசம்பர் 23ம் தேதி வரை விருப்ப மனு அளித்திட அறிவிப்பு வெளியாகியிருந்தது.

கடந்த 19ம் தேதி அமாவாசை நாளில் விருப்ப மனு தாக்கல் செய்ய அதிமுக தலைமைக்கு அதிக அளவில் வர பெற்றிருந்தனர். பெரம்பலூர் மாவட்டத்தை பொறுத்த அளவில், அதிமுக மாவட்ட செயலாளர் தமிழ்செல்வனுக்கு பெரிய அளவில் எதிர்ப்பு இருந்து வரும் நிலையிலும், பெரம்பலூர் அதிமுகவின் முன்னாள் எம்.பி, முன்னாள் எம்.எல்ஏ, முன்னாள் அமைச்சர் மற்றும் தற்போதுள்ள முக்கிய மாவட்ட, ஒன்றிய பொறுப்பாளர்கள் என 100க்கும் மேற்பட்டோர், அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமியிடம் இதுவரை 11 முறை புகார் மனு அளித்துள்ள நிலையில், என்ன செய்வதென்று தெரியாமல் விழி பிதுங்கி தவித்து கொண்டிருந்திருக்கிறார் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன்.

இந்நிலையில் சேலம் புற நகர் மாவட்ட செயலாளரும், முன்னாள் தமிழ்நாடு கூட்டுறவு சேர்மனுமான, எடப்பாடி பழனிசாமியின் நிழலாக செயல்படுபவருமான ஆத்தூரார் என்றழைக்கப்படும் இளங்கோவன் என்பவர் பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வனிடம், சில யுக்திகளை தெரிவித்ததாக கூறப்படுகிறது. அதன்படி பெரம்பலூர் மாவட்ட செயலாளர் பெயரில் பெரம்பலூர் அதிமுகவினர் சுமார் 20க்கும் மேற்பட்டோர் விருப்ப மனு அளிப்பதாக முடிவெடுத்து, முதல் நாளே அனைவரும் வங்கி வரைவோலை எடுத்து வைத்து கொண்டு அன்று இரவே சென்னை சென்றுள்ளனர்.



ஆத்தூரார் இளங்கோவன்

கடந்த 19ம் தேதி காலையிலேயே அதிமுக பொதுச் செயலாளர் அறிவிப்பு ஒன்று வெளியிட்டிருந்தார். அந்த அறிவிப்பின் படி, பொதுச் செயலாளரை தவிர மற்ற எவர் பெயரிலும், வேறெவரும் கூடுதலாக விருப்ப மனு தாக்கல் செய்ய கூடாது என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த தகவல் அறிந்ததும், பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன் ரொம்பவே அப்செட் ஆகி விட்டதாக கூறப்படுகிறது. தனது பெயரில் விருப்ப மனு செலுத்த அழைத்து சென்றிருந்த 20க்கும் மேற்பட்டோர்களை வேறு வழியின்றி அவரவர் பெயரில் விருப்ப மனு செலுத்த கூறி விட்டாராம் தமிழ்செல்வன்.

தற்போது பெரம்பலூர் மாவட்ட செயலாளர் தமிழ்செல்வன் பொதுச் செயலாளரின் அறிவிப்பால், தான் நினைத்தது வேறு, நடந்தது வேறு என்று கையை பிசைந்து கொண்டிருப்பதாக கூறப்படுகிறது.

## சின்னஊர்சேரி கிராமத்தில் ஓம்சக்தி வழிபாட்டு குழு சார்பில் திருவிளக்கு பூஜை

அலங்காநல்லூர்.டிச.23

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள சின்னஊர்சேரி கிராமத்தில் அமைந்துள்ள ஓம்சக்தி வழிபாட்டு குழுவினர் சார்பில் மார்கழி மாதத்தை முன்னிட்டு மேல்மருவத்தூர் ஆதிபராசக்திக்கு மாலை அணிந்துவிரதம் இருந்து வருகின்றனர். ஓம் சக்தி வழிபாட்டு குழு சார்பில் மந்தை திடல் பகுதியில் அமைந்துள்ள சக்தி விநாயகர் ஜோதிசெட்டி கருப்பசாமி பெருமாள் உறங்காம்புளி , ஆகிய சுவாமிகளுக்கு பால் தயிர் பன்னீர்நெய் விபூதி குங்குமம் சந்தனம் உள்ளிட்டவைகளால் அபிஷேகம் நடைபெற்றது. பின்னர் சுவாமிகளுக்கு பல்வேறு மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு சிறப்பு தீபாரணையும் காண்பிக்கப்பட்டது. அதனை தொடர்ந்து கோவிலுக்கு வருகை தந்த பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்தனர் அன்று மாலை 7 மணி அளவில் அம்மன் பாடலுடன் திருவிளக்கு பூஜை நடைபெற்றது இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக கீழசின்னணம்பட்டி பிரிவில் அமைந்துள்ள தீர்த்தகரைமாரியம்மன் கோவில் ஸ்ரீநிதிஅம்மா, கலந்துகொண்டு தாய் விளக்கை ஏற்றி வைத்து திருவிளக்கு பூஜையை தொடங்கி வைத்தார்.பூஜையில் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் பூஜை பொருட்கள் வழங்கப்பட்டது தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்பட்டது.

இவ்விழாவுக்கான ஏற்பாடுகளை ஓம் சக்தி வழிபாட்டுக் குழுவினர் செய்திருந்தனர்.







## இந்து தமிழர் கட்சி நிறுவனத் தலைவர் ராம ரவிக்குமார் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனு அளித்தார்

திண்டுக்கல், டிச.23-
கீழக்கோட்டை கிராமத்தில் இந்து சமய அறநிலையத்துறை கட்டுப்பாட்டில் உள்ள அருள்மிகு மாரியம்மன் மற்றும் பகவதி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை 10 ஏக்கர் 38 சென்ட் இடத்தை திமுகவை சேர்ந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் ஐ.பெரியசாமி, பழனி சட்டமன்ற உறுப்பினர் ஐ.பி.செந்தில்குமார் ஆகியோர் கூட்டாக சேர்ந்துசின்னாளபட்டி வட்டார ஐ.பி.சுற்றுலா வேன் மற்றும் கார் உரிமையாளர்கள் நல சங்கம் காந்திகிராமம் என்ற பெயரில் போர்டு வைத்து சட்ட விரோதமாக திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி ஆக்கிரமித்துள்ளனர் எனவே திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை காத்திட வேண்டியும், கோவில் இடத்தை ஆக்கிரமிக்க முயற்சி செய்யும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மனு அளித்தார்



## தேவாரம் அம்பேத்கர் நினைவு பேருந்து நிலையம் அருகே பாண்டியர் குல வணிகர் சங்கம் சாக்குளத்து மெட்டு சாலை அமைக்க வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

தேனி டிச.23-
தேனி மாவட்டம் தேவாரம் பாரத ரத்னா டாக்டர் அம்பேத்கர் நினைவு பேருந்து நிலையம் அருகே பாண்டியர் குல வணிகர் சங்கம் சார்பில் சாக்கு லூத்து மெட்டு மலைப்பாதையை சீரமைத்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில்பாண்டியர் குல வணிகர் சங்கத் தலைவர் குணசேகரன் செயலாளர் கேசவராஜா துணைச் செயலாளர் கிருஷ்ணமூர்த்தி ஐம்பெரும் குழு பொதுச்செயலாளர் செல்லையா,சுருளி செயற்குழு உறுப்பினர் கருப்பையா, ஈஸ்வரன்பாண்டியர் குல வணிகர் சங்க நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டு கையில் சாக்கு லூத்து மெட்டுச்சாலை திட்டத்தை உடனே நிறைவேற்று என்ற பதாகைகள் கையில் ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்தொடர்ந்து எதிர் வரும் சட்டமன்ற தேர்தலில் புறக்கணிப்புடன் தொடர் ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்று கூறினர். இந்நிகழ்வில் பாண்டியர் குல வணிகர் சங்க நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்

## அரசு ஊழியர்கள், ஆசிரியர்களுடன் தமிழக அமைச்சர்கள் குழு பேச்சு



சென்னை, டிச.23-
அரசு ஊழியர்கள், ஆசிரியர் சங்க நிர்வாகிளுடன் தமிழக அமைச்சர்கள் குழு பேச்சுவார்த்தை தொடங்கியது.

'தி.மு.க., ஆட்சிக்கு வந்தால் பழைய ஓய்வூதிய திட்டம் அமல்படுத்தப்படும்; அரசு துறைகளில் காலி பணியிடங்கள் நிரப்பப்படும்; ஆசிரியர்களுக்கு உரிய ஊதியம் வழங்கப்படும்' என, கடந்த சட்டசபை தேர்தலின் போது, தற்போதைய ஆளுங்கட்சி தரப்பில் அரசு ஊழியர், ஆசிரியர்களுக்கு பல வாக்குறுதிகள் அளிக்கப்பட்டன.

இவற்றை நம்பி, அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் சங்கங்கள், தி.மு.க., வுக்கு ஆதரவு அளித்தன. ஆனால், தி.மு.க., ஆட்சிக்கு வந்து ஐந்து ஆண்டுகள் முடிய உள்ளது. அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை.

சட்டசபை தேர்தல் நெருங்குவதால், அரசு ஊழியர்களின் போராட்டம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், தற்செயல் விடுப்பு என்று தொடர் போராட்டத்தை ஆசிரியர் சங்கத்தினர் செயல்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் இன்று (டிசம்பர் 22) சென்னை தலைமை செயலகத்தில் அமைச்சர்கள் எ.வ.வேலு, தங்கம் தென்னரசு, மகேஷ் ஆகிய 3 பேர் கொண்ட குழுவினர், ஜேக்டோ ஜியோ எனப்படும் அரசு ஊழியர், ஆசிரியர் கூட்டமைப்புடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.

## இன்ஜின் திடீரென செயலிழப்பு... ஏர் இந்தியா விமானம் டில்லியில் அவசர தரையிறக்கம்



புதுடில்லி, டிச.23-
இன்ஜினில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக, ஏர் இந்தியா விமானம் புறப்பட்ட சில நிமிடங்களில் மீண்டும் டில்லி விமான நிலையத்தில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டது.டில்லி விமான நிலையத்தில் இருந்து (டிசம்பர் 22) காலை 6.10 மணிக்கு ஏர் இந்தியா விமானம், மும்பைக்கு புறப்பட்டு சென்றது. வானத்தில் பறந்த சில நிமிடங்களில் விமானத்தில் திடீரென தொழில்நுட்ப கோளாறு கண்டறியப்பட்டது. அதாவது, இரு இன்ஜின்களில் ஒன்று திடீரென செயலிழந்து விட்டது. இதனால், விமானத்தை மீண்டும் டில்லியில் தரையிறக்க விமானி முடிவு செய்தார்.

அதன்படி, டில்லி விமான நிலையத்திற்கு தகவல் அளிக்கப்பட்டு, மீண்டும் விமானம் பத்திரமாக தரையிறக்கப்பட்டது. இதில், பயணிகள், ஊழியர்கள் என யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை. பயணிகளுக்கு ஏற்பட்ட இந்த அசவுகரியத்திற்கு மன்னிப்பு கேட்டுக் கொள்வதாக ஏர் இந்தியா விமான நிறுவனம் தெரிவித்தது. மேலும், மீண்டும் விமானம் புறப்படும் வரை பயணிகளுக்கு தேவையான அனைத்து அடிப்படை உதவிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

# சமூக நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம்: விஜய்





சென்னை, டிச.23-
சமூக சமய நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம் என இன்று நடந்த கிறிஸ்துமஸ் விழாவில் நடிகர் விஜய் பேசினார்.

செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடந்த சமத்துவ கிறிஸ்துமஸ் விழாவில் விஜய் பேசியதாவது: இது ஒரு அன்பான தருணம், அழகான தருணம். அன்பும், கருணையும் தானே எல்லாத்துக்கும் அடிப்படை. இது இரண்டும் இருக்கிற மனது தானே தாய் மனசு. நமது தமிழ மண்ணும் அப்படிப்பட்ட ஒரு மண் தானே, தாய் அன்பு கொண்ட மண் தானே. ஒரு தாய்க்கு எல்லா பிள்ளைகளும் ஒன்று தானே? பொங்கல், தீபாவளி, ரம்ஜான், கிறிஸ்துமஸ் என எல்லாம் பண்டிகையும், எல்லோரும் சந்தோஷமாக, ஷேர் பண்ணிக்க கூடிய ஊர் தானே நம்ம ஊர்.

**நல்லிணக்கம்**

இங்க வாழ்க்கை முறையும், வழிபாட்டு முறையும் வேறு, வேறு என்றாலும் நாம எல்லோரும் சகோதரர்கள் தானே? அதனால் தான் நாம் அரசியலுக்கு வந்த பிறகு, கடவுள் நம்பிக்கை உண்டு என்று அறிவித்து ஏன் தெரியுமா? உண்மையான நம்பிக்கை தான் நல்லிணக்கத்தை விதைக்கும். மற்றவர்களின் நம்பிக்கையை மதிக்க சொல்லித் தர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கை இருந்தால் மட்டுமே போதும், எந்த பிரச்னைகளையும் ஜெயிக்கும். அது மட்டுமல்ல, அப்படிப்பட்ட ஒரு நம்பிக்கையின் வலிமையை பற்றி சொல்வதற்கு பைபிளில் நிறைய கதைகள் இருக்கிறது.

**சகோதரர்களே!**

அதை படிக்காதவர்கள் படித்து பாருங்கள். குறிப்பாக ஒன்று பற்றி சொல்ல வேண்டும் என்றால், ஒரு இளைஞருக்கு எதிராக, தன்னுடைய சொந்த சகோதரர்களே பொறாமைபட்டு, அவனை பாழும் கிணற்றில் தள்ளிவிட்டனர், அதன் பிறகு அவர் எப்படி மீண்டு வந்து அந்த நாட்டிற்கே அரசன் ஆகி, தனக்கு துரோகம் செய்த சகோதரர்களை மட்டுமல்ல, அந்த நாட்டையே எப்படி காப்பாற்றினார் என்ற கதை பைபிளில் இருக்கிறது. படிக்காதவர்கள் படித்து பாருங்கள்.

**எதிரிகளைஞ்!**

அந்த குறிப்பிட்ட கதை யாரை பற்றிய கதை என்று நான் சொல்லி தெரிய வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். அது உங்கள் எல்லோருக்கும் நன்றாக தெரியும். இப்படிப்பட்ட கதைகள் எல்லாம் நமக்கு எதை உணர்த்துகிறது என்றால், கடவுளின் அருளும், மக்களை நேசிக்கிற அன்பும், அதிக வலிமையும், அதற்கான உழைப்பும் இருந்தால் மட்டுமே போதும், எவ்வளவு பெரிய ஒரு போராட்டமோ, போரோ, எதிரிகளையோ ஜெயிக்கலாம். இதை தான் இந்த கதைகள் நமக்கு உணர்த்துகிறது. இந்த விழாவில் ஒரு உறுதியை நான் கொடுக்கிறேன்.

**வெற்றி நிச்சயம்**

நாமும், தமிழக வெற்றிக்கழகமும் சமூக, சமய நல்லிணக்கத்தை பாதுகாப்பதில் 100 சதவீதம் உறுதியாக இருப்போம். அதில் எந்த விதமான சமரசமும் இருக்கவே இருக்காது. அதனால் தான் நமது கொள்கைகளுக்கு மதசார்பற்ற கொள்கை என்று பெயர் வைத்தோம். கண்டிப்பாக ஒரு ஒளி பிறக்கும்; அந்த ஒளி நம்மை வழிநடத்தும். நம்பிக்கையுடன் இருங்கள்; வெற்றி நிச்சயம். இங்கு வந்து இருக்கும் அனைவருக்கும் கிறிஸ்துமஸ் நல்வாழ்த்துக்கள். அனைத்து புகழும் எல்லா வல்ல இறைவனுக்கே. இவ்வாறு விஜய் பேசினார்

## வட இந்தியாவில் நீடிக்கும் கடும் பனி; 2 நாட்கள் விமானங்கள், ரயில் சேவை பாதிக்கும் என எச்சரிக்கை





புதுடில்லி, டிச.23-
வட இந்தியாவில் இரண்டு நாட்களுக்கு கடும்பனி நிலவும். இதனால் விமானங்கள், ரயில்கள் சேவை பாதிக்கும் என வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர்.

வட மாநிலங்களில் கடந்த சில நாட்களாக கடும் குளிர் நிலவி வருகிறது. சாலைகளில் எதிரில் இருப்பது தெரியாத அளவுக்கு கடும் பனிமூட்டம் காணப்படுகிறது. இதனால் சாலை போக்குவரத்து மட்டுமல்லாது, விமான சேவைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் விமானங்கள், ரயில்கள் ரத்து செய்யப்படுவதால் பயணிகள் கடும் அவதி அடைந்தனர்.

இந்நிலையில் மேலும் 2 நாட்களுக்கு விமானங்கள், ரயில்கள் சேவை பாதிக்கும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். இது குறித்து வானிலை ஆய்வாளர்கள் கூறியதாவது: மூடுபனி 2 நாட்களுக்கு வட இந்தியா முழுவதும் நிலவும். இதனால் விமானங்கள், ரயில்கள் சேவை பாதிக்கக்கூடும். மூடுபனியின் தீவிரம் படிப்படியாக குறையக்கூடும். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

இந்த சூழலில், இன்று (டிசம்பர் 22) விமானங்கள், ரயில்கள் சேவை சற்று மேம்படுத்தப்பட்டிருந்தாலும் திடீர் வானிலை மாற்றங்கள் காரணமாக சேவைகள் பாதிக்க வாய்ப்புள்ளது என்பதால் பயணிகள் எச்சரிக்கையாக இருக்குமாறு, விமான நிறுவனங்கள் அறிவுறுத்தல் வழங்கி உள்ளன. பயணிகள் விமான நிலையத்திற்கு வருவதற்கு முன்பு, தங்களது விமான நிலையை இணையதளத்தில் அறிந்து கொள்ள வேண்டும் என விமான நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

## பாஜ கூட்டணி வெற்றிக்கு தேர்தல் கமிஷன் தான் காரணம்; காங்கிரஸ் மீண்டும் அதே பல்லவி!



மும்பை, டிச.23-
மஹாராஷ்டிரா உள்ளாட்சி தேர்தலில் பாஜ கூட்டணி வெற்றி பெற்றதற்கு, மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரமும், தேர்தல் கமிஷனும் தான் காரணம் என்று காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியுள்ளன.

மஹாராஷ்டிரா மாநிலத்தில் உள்ள 246 நகராட்சி, 42 நகர பஞ்சாயத்துகளுக்கு கடந்த டிசம்பர் 2ம் தேதி மற்றும் 20ம் தேதி என இருகட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. தேர்தலில் பதிவான ஓட்டுகள் நேற்று எண்ணப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டன. உள்ளாட்சி தேர்தலில் பதிவான ஓட்டுகள் நேற்று எண்ணப்பட்டன. மொத்தமுள்ள 246 நகராட்சிகளில், ஆளும் மஹாயுதி கூட்டணி, 178ஐ கைப்பற்றி சாதித்துள்ளது.

இதில், பா.ஜ., 100, துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டேவின் சிவசேனா 45, மற்றொரு துணை முதல்வர் அஜித் பவாரின் தேசியவாத காங்கிரஸ் 33 நகராட்சிகளை கைப்பற்றி உள்ளன. மஹா விகாஸ் அகாடி கூட்டணி, 41 நகராட்சிகளையே பிடித்துள்ளது. இதில், காங்கிரஸ் 26 இடங்கள், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா 7 இடங்கள், சரத் பவாரின் தேசியவாத காங்கிரஸ் 8 இடங்களை வென்றுள்ளன.

அதேபோல, 42 நகர பஞ்சாயத்துகளில், மஹாயுதி கூட்டணி 34 இடங்களைக் கைப்பற்றி உள்ளது. அதில் பாஜ மட்டும் 23 இடங்களை வென்றுள்ளது. மஹா விகாஸ் அகாடி கூட்டணி, 7 பஞ்சாயத்துகளை மட்டுமே பிடித்துள்ளது. இந்த வெற்றியை பாஜ மற்றும் மஹாயுதி கூட்டணி கட்சியினர் உற்சாகமாகக் கொண்டாடி வருகின்றனர்.

இந்த நிலையில், மஹாராஷ்டிரா உள்ளாட்சி தேர்தலில் பாஜ கூட்டணி வெற்றி பெற்றதற்கு, மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரமும், தேர்தல் ஆணையமும் தான் காரணம் என்று காங்கிரஸ் வழக்கமான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளது.

இது குறித்து மஹாராஷ்டிரா காங்கிரஸ் தலைவர் ஹர்ஷ்வர்தன் சப்கல் கூறுகையில், 'தேர்தல் கமிஷனின் ஆசிர்வாதத்தால் ஆளும் கூட்டணி வெற்றி பெற்றுள்ளது. இந்தத் தேர்தல் முடிவுகள் மக்களின் மனநிலையை பிரதிபலிக்கவில்லை. தேர்தல் கமிஷன் ஆளும் கட்சியின் கைப்பாவையாகி விட்டது.

தேர்தல் கமிஷனின் குழப்பமான செயல்பாடு மற்றும் தேர்தலுக்காக ஆளும் கட்சி பணத்தை வாரி இறைத்ததால், காங்கிரஸ் கட்சிக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்கவில்லை. ஊழல் மற்றும் எந்த நலத்திட்டங்களையும் செய்யாததால், ஆளும் கட்சியின் மீது பொதுமக்கள் அதிருப்தியில் உள்ளனர். ஜனநாயகமும், அரசியலமைப்பும் ஒடுக்கப்பட்டுள்ளன,' என்றார்.

உத்தவ் தாக்கரே சிவசேனாவைச் சேர்ந்த சஞ்சய் ராவத் கூறுகையில், 'இவை அனைத்துக்கும் மேலாக, மஹாயுதி கூட்டணியின் வெற்றிக்கு மின்னணு ஓட்டுப்பதிவு இயந்திரங்களில் செய்யப்பட்ட முறைகேடுகளே காரணம்,' எனக் குற்றம்சாட்டினார்



## இந்தோனேசியாவில் சோகம்; பஸ் விபத்தில் பயணிகள் 16 பேர் பலி

ஜகார்த்தா. டிச.23-
இந்தோனேசியாவில் பஸ் கவிழ்ந்து ஏற்பட்ட விபத்தில், பயணிகள் 16 பேர் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

இந்தோனேசியாவின் மத்திய ஜாவா மாகாணத்தில் பயணிகள் 35 பேரை ஏற்றிக்கொண்டு பஸ் சென்று கொண்டிருந்தது. அப்போது பஸ் திடீரென கட்டுப்பாட்டை இழந்து சாலையின் நடுவே இருந்த தடுப்பு சுவரில் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் சம்பவ இடத்திலேயே பயணிகள் 6 பேர் உயிரிழந்தனர். மேலும் 10 பேர் பலத்த காயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பலன் அளிக்காமல் உயிரிழந்தனர். இதனால் பலி எண்ணிக்கை 16 ஆக அதிகரித்தது என அதிகாரிகள் தெரிவித்தனர்.

தலைநகர் ஜகார்த்தாவில் இருந்து, யோக்யகர்த்தா நகரத்திற்கு பஸ் சென்று கொண்டிருந்த போது விபத்து நிகழ்ந்துள்ளது விசாரணையில் தெரியவந்தது. விபத்துக்கான காரணம் குறித்து விசாரணை நடந்து வருகிறது

## ஜாதி, நிறம், மதம் பார்த்து ஓட்டு போடக்கூடாது: சீமான் வேண்டுகோள்



சென்னை, டிச.23-
''சாப்பாட்டில் மட்டும்தான் கூட்டு, பொரியல் எல்லாம்; தேர்தலில் கூட்டு என்பதே இல்லை,'' என, நா.த.க., தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

நாம் தமிழர் கட்சி மகளிர் பாசறை, மாநில கலந்தாய்வு கூட்டம், நேற்று திருச்சியில் நடந்தது. இதில், சீமான் பேசியதாவது:

பெண்களுக்கான விடுதலை, உரிமை ஆகியவற்றை போராடித்தான் பெற வேண்டும். அதற்கான களமே அரசியல். அதனால்தான், சட்டசபை தேர்தலில், சரிபாதியாக 117 இடங்களை, பெண்களுக்கு நாம் தமிழர் கட்சி வழங்குகிறது.

போட்டியிட, தங்களுக்கு வாய்ப்பு வழங்கவில்லையே என வருத்தம் இருக்கலாம். களத்தில் உள்ள சிக்கலை புரிந்து கொள்ள வேண்டும்.

பெரும்பான்மை சமூகத்துக்கும் இடம் கொடுக்க வேண்டும். கொடுக்காமல் விட்டால், விமர்சனங்கள் எழும். புறக்கணிக்கப்பட்ட சமூகங்களும் உள்ளன. அவர்களுக்கும், நாம் வாய்ப்பு வழங்குகிறோம்.

ஜாதி, நிறம், மதம் பார்த்து, யாரும் ஓட்டு போடக்கூடாது. ஜாதியாக நின்று, இங்கு யாரும் வென்றதில்லை. எந்த சமூகத்துடன், மற்ற சமூகம் இணைகிறதோ, அப்போதுதான் வெற்றி கிடைக்கும்.

மக்களுக்கு நம் அரசியல் புரியும்போது, நம்மை கொண்டாடுவர். எனவே, நம்மை நோக்கி வரும் விமர்சனங்களை புறம் தள்ளுங்கள். சட்டசபை தேர்தலில், நாம் தமிழர் கட்சி சார்பில் போட்டியிடும் 234 வேட்பாளர்களையும், வரும் பிப்., 21ல் திருச்சியில் நடக்கும் மாநாட்டில் அறிவிப்போம். அனைவரும் இளைஞர்கள்தான்.

தேர்தலில் சமரசம் இல்லை. தேர்தல் கூட்டணி கிடையாது; சாப்பாட்டில் மட்டும்தான் கூட்டு, பொரியல் எல்லாம். சண்டை எல்லாம் தனித்து தான் போடுவோம். இவ்வாறு அவர் பேசினார்.

# நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதனுக்கு ஆதரவாக குடியரசு தலைவருக்கு கடிதம் அனுப்பும் இளம் வழக்கறிஞர்கள்



மதுரை, டிச.23-

திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் கார்த்திகை தீபம் ஏற்ற உயர் நீதிமன்ற மதுரை அமர்வு நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாதன் உத்தரவிட்டார். இதையடுத்து அவரை பதவி நீக்கம் செய்வது தொடர்பாக தீர்மானம் நிறை வேற்றக் கோரி மக்களவைத் தலைவரிடம் திமுக காங்கிரஸ் எம்.பி.க்கள் மனு அளித்துள்ளனர்.

இந்த தீர்மானத்தை தொடக்க நிலையிலேயே நிராகரிக்க வேண்டும் என உயர் நீதிமன்ற மதுரை அமர்வு மூத்த வழக்கறிஞர்கள் உட்பட 300க்கும் மேற்பட்ட வழக்கறிஞர்கள் மக்களவைத் தலைவருக்கு ஏற்கெனவே கடிதம் அனுப்பியிருந்தனர்.

இந்நிலையில், நீதிபதி ஜி.ஆர்.சுவாமிநாத னுக்கு ஆதரவாக உயர் நீதிமன்ற மதுரை அமர்வின் இளம் வழக்கறிஞர்கள் ஏராளமானோர் குடியரசுத் தலைவருக்கு தனித்தனியாக தற்போது கடிதம் அனுப்பி வருகின்றனர். அந்த கடிதத்தில், நீதிபதிக்கு எதிராக பதவி நீக்க தீர்மானம் முற்றிலும் நியாயமற்றது.

அரசியல் உள்நோக்கம் கொண்டது. நீதிபதி சுவாமிநாதன் அர்ப்பணிப்பு உணர்வுடன் பணிபுரிந்து லட்சக்கணக்கான வழக்குகளை விசாரித்து தீர்ப்பு வழங்கியுள்ளார். மதம், சாதி வேறுபாடு இல்லாமல் பணிபுரிந்து வழக்குகளின் எண்ணிக்கையை குறைப்பதிலும், சமூகத்தின் அனைத்து பிரிவினருக்கும் பாரபட்சம் இல்லாமல் நீதி வழங்குவதிலும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

சமீபத்தில் ஒரு வழக்கில் மாநில அரசுக்கு எதிராக தீர்ப்பு வழங்கியதால் அவரை பதவி நீக்கம் செய்யக்கோரி தீர்மானம் அளிக்கப்பட்டுள்ளது. நீதிமன்றத்தின் தீர்ப்பை வைத்து நீதிபதியை பதவி நீக்கம் செய்ய முயற்சிக்கிறார்கள்.

இது நீதித்துறையின் சுதந்திரத்தை சீர்குலைக்கும் மற்றும் நீதித்துறையில் தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்தும். இதனால் நீதித்துறையை பாதுகாத்து அரசியலமைப்பையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.



# மக்கள் கேட்ட நல்ல திட்டங்களை கொண்டு வராமல், டாஸ்மாக் மதுபான கடைகளை திமுக அரசு திறக்கிறது: சவுமியா அன்புமணி குற்றச்சாட்டு

ஆர்.கே.பேட்டை, டிச.23-

ஆர்.கே.பேட்டையில் பாமக சார்பில் நடைபெற்ற 'தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம்' நிகழ்ச்சியில் பங்கேற்ற 'பசுமைத் தாயகம்' அமைப்பின் தலைவர் சவுமியா அன்புமணி, பெண்கள் மற்றும் பாமகவினரை பார்த்து கையசைத்த காட்சி.

திருவள்ளூர்: 'மக்கள் கேட்ட நல்ல திட்டங்களை எல்லாம் கொண்டு வராமல், யாரும் கேட்காத டாஸ்மாக் மதுபான கடைகளை திமுக அரசு திறக்கிறது' என, 'பசுமைத் தாயகம்' அமைப்பு தலைவர் சவுமியா அன்புமணி குற்றம் சாட்டினார். 'பசுமைத் தாயகம்' அமைப்பு தலைவர் சவுமியா அன்புமணியின் 'தமிழக மகளிர் உரிமை மீட்புப் பயணம்'நிகழ்வுநேற்று திருவள் ளூர் மாவட்டம், திருத்தணி அருகே ஆர் .கே.பேட்டையில் நடைபெற்றது.

தில், சவுமியா அன்புமணி பேசியதாவது: ஆந்திர மாநிலத்தின் எல்லையோரத்தில் உள்ளதால், திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா கடத்தப்படுகிறது. இதனால், திருவள்ளூர் மாவட்டத்தில் மட்டும் 60 ஆயிரம் கிலோ கஞ்சா புழங்குவதாக தகவல் வருகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் அதிகளவில் கஞ்சா புழங்குவதால், இளைஞர்களிடையே ஏற்பட்டுள்ள போதை பழக்கத்தால், பொதட்டூர்பேட்டையில் இன்சூரன்ஸ் பணத்துக்காக இரு மகன்கள், தந்தையையே பாம்பு கடிக்கச் செய்து கொன்றுள்ளனர். அசாம் மாநிலத்தைச் சேர்ந்த இளைஞரால், கும்மிடிப்பூண்டி அருகே ஆரம்பாக்கத்தில் சிறுமி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டுள்ளார்.

டாஸ்மாக் மதுபான கடையை திறப்பதற்கு எதற்காக ஒரு அரசாங்கம் நமக்கு வேண்டும்? திருத்தணியில் ஒரு நெசவு பூங்கா கொண்டு வரவேண்டும். திருவள்ளூர் மாவட்டத்தில் பூ விவசாயிகளுக்கு ஒரு நறுமணப் பொருட்கள் தயாரிக்கும் ஆலை அமைக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்த கோரிக்கைகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை.

மக்கள் கேட்ட நல்ல திட்டங்களை எல்லாம் கொண்டு வராமல், யாரும் கேட்காத டாஸ்மாக் மதுபான கடைகளை திமுக அரசு திறக்கிறது. ஆகவே, வரக்கூடிய சட்டப்பேரவை தேர்தலில் பொதுமக்கள் சிந்தித்து நல்ல முடிவை எடுத்து, பாமக தலைவர் அன்புமணி பின்னால் நிற்கவேண்டும். அப்படி நின்றால்தான், மது போதை இல்லா தமிழ்நாடு உருவாகும். இவ்வாறு அவர் பேசினார்.

பாமகவினர் வாக்குவாதம்: சவுமியா அன்புமணி, நேற்று காலை திருத்தணி முருகன் கோயிலில் சுவாமி தரிசனம் செய்தார். அப்போது, சௌமியா அன்புமணியுடன் 5 நபர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த நிலையில், அவருடன் வந்த 20க்கும் மேற்பட்ட பாமகவினர் அனுமதி மீறி கோயில் உள்ளே செல்ல முயன்றனர். அவர்களை கோயில் ஊழியர்கள் தடுத்தனர். இதையடுத்து, கோயில் ஊழியர்களிடம் பாமகவினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

# டிசம்பர் 24ல் விண்ணில் பாய்கிறது அமெரிக்க செயற்கைக்கோள்; இஸ்ரோ தலைவர் திருப்பதியில் வழிபாடு

அமெரிக்கா, டிச.23-

டிசம்பர் 24ம் தேதி காலை 8.54 மணிக்கு அமெரிக்க செயற்கைக்கோளை இஸ்ரோ விண்ணில் செலுத்துகிறது. இந்த திட்டம் வெற்றி பெற, இஸ்ரோ தலைவர் நாராயணன், திருப்பதியில் வழிபாடு நடத்தினார். அமெரிக்காவை சேர்ந்த ஏ.எஸ்.டி., நிறுவனம், தகவல் தொடர்பு சேவைக்காக, 6,500 கிலோ எடையில், 'புளூபேர்ட்' செயற்கைக்கோளை உருவாக்கி உள்ளது; இது, தொலைதுபிர கிராமங்களுக்கு, மொபைல் போன், அதிவேக இணையதள சேவைகளை வழங்க உதவும். இந்த செயற்கைக்கோளை, நம் நாட்டின், 'இஸ்ரோ' எனப்படும், இந்திய விண்வெளி ஆய்வு மையம், விண்ணில் செலுத்த உள்ளதுஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில், இஸ்ரோவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மைய ஏவுதளத்தில் இருந்து, வரும், டிசம்பர் 24ம் தேதி காலை, 8:54 மணிக்கு, எல்.வி.எம்., 3 ராக்கெட் வாயிலாக, 'புளூபேர்ட்' செயற்கைக்கோள்விண்ணில் நிலைநிறுத்தப்பட உள்ளது.இதற்கான அனைத்து ஏற்பாடுகளும் நடந்து வருகிறது. நாளை காலை கவுன்டவுன் தொடங்குகிறது.

இந்நிலையில் (டிசம்பர் 22) இந்த திட்டம் வெற்றி பெற, இஸ்ரோ தலைவர் நாராயணன் திருப்பதியில் வழிபாடு நடத்தினார். தேவஸ்தான அதிகாரிகள் அவருக்கு பிரசாரதம் வழங்கினர். பின்னர் நிருபர்களிடம் இஸ்ரோ சார்பில் விண்ணில் ஏவப்படும் அமெரிக்க செயற்கை கோள், ககன்யான், சந்திரயான் 4 திட்டங்கள் குறித்து விளக்கினார்.அவர் 2027ல் சந்திரயான் 4 திட்டம் முழுமை பெறும் என்று உறுதி அளித்துள்ளார்.

# சிவகங்கை அரசு பள்ளிகளில் 10 மாதங்களாக இயங்காத ஸ்மார்ட் வகுப்பறை



சிவகங்கை, டிச.23-

சிவகங்கை மாவட்டத்தில் இணைய கேபிள் செலவை பிஎஸ்என்எல், பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் ஏற்க மறுப்பதால் அரசுப் பள்ளிகளில் 10 மாதங்களாக ஸ்மார்ட் வகுப்பறை, தொழில்நுட்ப ஆய்வகம் இயங்காத நிலை உள்ளது.

தமிழகத்தில் அரசு நடுநிலைப் பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், தொடக்கப் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறைகள் அமைக்கப்பட்டன. இதற்காக மாநிலம் முழுவதும் 28,000 அரசு தொடக்க, நடுநிலைப் பள்ளிகளிலும் பிஎஸ்என்எல் மூலம் 100 எம்பிபிஎஸ் வேகம் கொண்ட 'பிராட் பேண்ட்' இணைப்பு கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆனால், பல பள்ளிகள் நகரங்களில் இருந்து பல கி.மீ. தூரத்தில் உள்ள கிராமங்களில் இருக்கின்றன.

இதையடுத்து குறிப்பிட்ட தூரத்துக்கு மேல் கேபிள் கொண்டு செல்ல கூடுதல் செலவாகும் என்பதால் பிஎஸ்என்எல் சார்பில் பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் அதற்கான செலவு தொகை கேட்கப்பட்டது. இதற்கு ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதையடுத்து சிவகங்கை மாவட்டத்தில் வாய்ப்பு இருந்தால் தனியார் இணைய இணைப்புப் பெற்று, உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகளை இயக்க பள்ளி கல்வித்துறை அதிகாரிகள் உத்தரவிட்டனர்.

அதன் படி, சில தனியார் நிறுவனங்கள் மூலம் பள்ளிகளில் இணைய இணைப்பை ஆசிரியர்கள் பெற்றனர். இப்பள்ளிகளில் இணைய இணைப்புக்காக மாதந்தோறும் ரூ.1,500 வழங்கப்பட்டு வந்ததன. இந்நிலையில் கடந்த பிப்ரவரியில் அனைத்துப் பள்ளிகளிலும் பிஎஸ்என்எல் இணைப்புதான் பெற வேண்டும்.

மாதக் கட்டணத்தை அரசே பிஎஸ்என்எல் நிறுவனத்தில் செலுத்திவிடும் என்று கூறி பள்ளிகளுக்கு வழங்கிய ரூ.1,500ஐ நிறுத்தினர். ஆனால், பல கட்டங்களாக பிஎஸ்என்எல், பள்ளிக் கல்வித்துறை அதிகாரிகள் இணைந்து கூட்டம் நடத்தியும் கேபிள் கொண்டு செல்வதற்கான கூடுதல் செலவை யார் ஏற்றுகொள்வது என்ற குழப்பம் நீடிக்கிறது. இதனால் பல பள்ளிகளில் உயர் தொழில்நுட்ப ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் இயங்காமல் முடங்கிக்கிடக்கின்றன.

இது குறித்து ஆசிரியர்கள் சிலர் கூறியதாவது: பிஎஸ்என்எல் இணைப்புப் பெற பள்ளிகளின் தூரத்துக்கு ஏற்ப ரூ.3,000 முதல் ரூ.30,000 வரை கூடுதலாகக் கேட்கின்றனர். அந்தச் செலவை பள்ளிக் கல்வித்துறையும், பிஎஸ்என்எல் நிறுவனமும் ஏற்க மறுக்கின்றன. ஏற்கெனவே தனியாரிடம் பெற்ற இணைய வசதிக்குரிய பணத்தையும் நிறுத்திவிட்டனர். இதனால் தொழில்நுட்ப ஆய்வகங்கள், ஸ்மார்ட் வகுப்பறைகள் முடங்கியுள்ளன.

பிஎஸ்என்எல் இணைப்பு வசதியுள்ள 10 சதவீத நகரப் பள்ளிகளில் மட்டுமே இயங்குகின்றன. இவ்வாறு அவர்கள் கூறினர். இது குறித்து பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகளிடம் கேட்டபோது, 'இணைய வசதியை பிஎஸ்என்எல் நிறுவனத்திடமே பெற அரசு கூறியுள்ளது. ஆனால், கேபிள் செலவை பிஎஸ்என்எல் நிறுவனம் ஏற்க மறுக்கிறது. தொடர்ந்து பேசி வருகிறோம்,' என்றனர்.

# மயக்க மருந்து கொடுத்து மருத்துவ மாணவி பாலியல் வன்கொடுமை: தனியார் மருத்துவமனை உரிமையாளர் கைது



சென்னை, டிச.23-

கொடுங்கையூரைச் சேர்ந்த மாணவி ஒருவர் சென்னையில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் பிஎஸ்சி பிசியோ தெரபி 4ம் ஆண்டு படித்து வருகிறார். இவர் பெரம்பூரில் உள்ள பிரபல மருத்துவமனை ஒன்றில் பயிற்சி பெற்று வந்தார். அந்த மருத்துவமனையில் ரூ.4 ஆயிரம் மாதாந்திர ஊக்கத் தொகை பெற்ற மாணவி அந்த மருத்துவமனை உரிமையாளரான பிசியோதெரபிஸ்ட் மீது கொளத்தூர் மகளிர் காவல் நிலையத்தில் புகார் ஒன்றை அளித்தார்.

அதில், ``பெரம்பூரில் உள்ள தனியார் மருத்துவமனை உரிமையாளரும், பிசியோதெரபிஸ்டுமான கார்த்திகேயன் நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு எனக்கு போன் செய்து, நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிக்க வருமாறு அழைத்தார். எனவே பகல் 1 மணி அளவில் நான் மருத்துவமனைக்கு சென்றேன்.

அதன் பிறகு, அவரது காரில் என்னை ஏற்றிக்கொண்டு பெண் ஒருவருக்கு மசாஜ் சிகிச்சை அளிக்க வேண்டும் என்று கூறினார். இதை நம்பி நான் அவருடன் கொளத்தூர்பகுதியில் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்கு காரில் சென்றேன். அப்போது கார்த்திகேயன் காரில் இருந்த குளிர்பானத்தை எனக்கு கொடுத்தார்.

அதைக் குடித்ததும் நான்மயங்கிவிட்டேன். அடுக்குமாடிக் குடியிருப்பில் ஓர் அறைக்குள் சென்ற பிறகு எனக்கு என்ன நடந்தது என்று தெரியவில்லை. நீண்ட நேரம் கழித்து கண்விழித்துப் பார்த்த போது எனது உடலில் ஆடைகள் எதுவும் இல்லை. என்னை அழைத்துச் சென்ற கார்த்திகேயனும் ஆடையின்றி படுக்கையில் எனது அருகில் படுத்திருந்தார்.

அதிர்ச்சி அடைந்த நான் அவரை தள்ளிவிட்டு உடைகளை அணிந்து கொண்டு அங்கிருந்து அச்சத்துடன் வீட்டுக்கு வந்து விட்டேன். பயந்து போய்யாரிடமும் சொல்லாமல் இருந்தேன். பின்னர் இதுபற்றி எனது அக்காவிடம் கூறினேன்.

குளிர்பானத்தில் மயக்க மருந்து கொடுத்து என்னுடன் தகாத உறவில் ஈடுபட்ட கார்த்திகேயன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று புகார் மனுவில் கூறப்பட்டு இருந்தது.

அந்த மாணவியின் புகார் உண்மை எனத் தெரியவந்ததை அடுத்து, குற்றச்சாட்டுக்கு உள்ளான கார்த்திகேயனை போலீஸார் கைது செய்தனர். மாணவியை அடைவதற்கு திட்டமிட்ட கார்த்திகேயன் இதற்காக நோயாளி ஒருவருக்கு பிசியோதெரபி செய்ய வேண்டும் என்று ஏமாற்றி மாணவியை தனது காரில் அழைத்துச் சென்றிருப்பது விசாரணையில் தெரியவந்துள்ளதாக போலீஸார் தெரிவித்தனர்



# அசாமில் சட்டவிரோதமாக குடியேறிய வங்கதேசத்தினர் 19 பேர் கைது

திஸ்புர், டிச.23-

அசாமில் சட்டவிரோதமாக குடியேறிய வங்கதேசத்தினர் 19 பேரை போலீசார் கைது செய்தனர். சட்டவிரோதமாக தங்கியிருப்பவர்களுக்கு முடிவு கட்டுவது உறுதி என்று முதல்வர் ஹிமாந்தா பிஸ்வா சர்மா தெரிவித்துள்ளார்.

அசாமில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை கண்டறிந்து, அவர்களை நாட்டில் இருந்து வெளியேற்றும் பணிகள் முடுக்கி விடப்பட்டுள்ளன. இந்த மாதத்தின் தொடக்கத்தில் சட்டவிரோதமாக குடியேறிய வெளிநாட்டவர்கள், வங்கதேசத்திற்கு செல்லும் துப்ரி, ஸ்ரீபூமி அல்லது தெற்கு சல்மாரா மன்கச்சார் வழியாக அசாமை விட்டு வெளியேறுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இந்த நிலையில், அசாமில் சட்டவிரோதமாக தங்கியிருந்த வங்கதேசத்தைச் சேர்ந்த 19 பேரை அசாம் போலீசார் மற்றும் எல்லை பாதுகாப்பு படையினர் கைது செய்துள்ளனர். அவர்கள் விரைவில் நாடு கடத்தப்பட உள்ளனர்.

இது குறித்து முதல்வர் ஹிமாந்தா பிஸ்வா சர்மா விடுத்துள்ள எக்ஸ் தளப்பதிவில், 'சட்டவிரோதமாக ஊடுருவியவர்களுக்கு இது பேரழிவுக்கான தருணமாகும். அசாமில் சட்டவிரோதமாக குடியேறுபவர்களுக்கு அனுமதி கிடையாது என்பதில் தெளிவாக இருக்கிறோம். அதுபோன்ற நபர்களுக்கு முடிவு கட்டுவது உறுதி,' எனக் குறிப்பிட்டுள்ளார்.

# 100 நாள் வேலை திட்டத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசின் அவலங்களை கிராம மக்கள் மத்தியில் எடுத்துரைக்க வேண்டும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ பி செந்தில்குமார்



• சின்னாளபட்டி, டிச 23-

100 நாள் வேலை திட்டத்தை முடக்க நினைக்கும் ஒன்றிய அரசின் அவலங்களை கிராம மக்கள் மத்தியில் எடுத்துரைக்க வேண்டும் என்று ஆத்தூர் தெற்கு ஒன்றியம் ஏ.இராமநாதபுரத்தில் நடைபெற்ற வாக்குச்சாவடி முகவர்களுக்கான ஆலோசனை கூட்டத்தில் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளர் ஐ பி செந்தில்குமார் பேசியதோடு புதிய வாக்காளர்களை சேர்க்க வேண்டுமென வேண்டுகோள் விடுத்தார்.

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தெற்கு ஒன்றியம் ஊராட்சிக்குட்பட்ட ஏ.இராமநாதபுரத்தில் வாக்கு சாவடி முகவர்களான பி.எல்.ஏ.2, பி.எல்.சி, பி.எல்.டி. மற்றும் கிளைக் கழக நிர்வாகிகளுக்கான என்வாக்கு சாவடி வெற்றி வாக்குச்சாவடி, தமிழ்நாட்டை தலை குனியவிடமாட்டோம் என்ற தலைப்பில் சிறப்பு ஆலோசனைக் கூட்டம் கழக நிர்வாகி பன்னீர்செல்வம் இல்லத்தில் நடைபெற்றது கூட்டத்திற்கு ஆத்தூர் தெற்கு ஒன்றிய திமுக செயலாளர் ராஜேந்திரன் தலைமை தாங்கினார் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக அவைத்தலைவர் வழக்கறிஞர் காமாட்சி, ஆத்தூர் தொகுதி திமுக தலைமை கழக தேர்தல் பொறுப்பாளர் கள்ளிப்பட்டி மணி, கிழக்கு மாவட்ட திமுக துணைச் செயலாளர் பிலால் உசேன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கே. அஸ்வின் பிரபாகரன், ஆகியோர் முன்னிலை வகித்தனர் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், பழனி சட்டமன்ற தொகுதி திமுக உறுப்பினருமான ஐ.பி செந்தில் குமார் கலந்து கொண்டு நிர்வாகிகள் மத்தியில் பேசும்போது நாம் ஏன் இந்த கூட்டத்தை ஒரு இல்லத்தில் வைத்திருக்கிறோம் என்றால் நாமெல்லாம் ஒரே குடும்பம் என்பதை உணர்த்தத்தான் தலைவர் அவர்கள் ஒவ்வொரு இல்லமாக சென்று கூட்டம் போட்டு பேசுங்கள் என உத்தரவிட்டுள்ளார். ஆத்தூர் தொகுதியில் நிறைவேற்றப்பட்ட திட்டங்கள் குறித்து உங்களிடம் வழங்கப் பட்ட துண்டு பிரசுரங்களை வீடு தவறாமல் கொண்டு சேர்க்க வேண்டும். வருகின்ற 5 மாதங்கள் நீங்கள் அயராது உழைத்தால் 5 வருடங்கள் உங்களுக்கு பலன்கள் கிடைக்கும் என்றார். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஆத்தூர் தொகுதியில் ஒரு ரூபாய் கூட வாங்காமல் வழங்கப்பட்ட அரசு பணிகள், விளையாட்டு துறையில் சாதனை படைத்த மாணவர்களுக்கு தமிழக அரசு வழங்கிய 3 சதவீத இட ஒதுக்கீடு, மகளிருக்கு வழங்கப்பட்ட சாதனைத் திட்டங்கள் குறித்து நீங்கள் ஒவ்வொரு குடும்பத்திலும் எடுத்துரைத்தால் போதும் உங்கள் பகுதியில் அதிக ஓட்டுக்களை நமது கழகத்திற்கு பெற்றுத்தர முடியும் என்றார். பாஜக, அதிமுக கட்சிகளைப்போல் ஆட்சியில் இருக்கும்போது மக்களுக்கான பயனுள்ள திட்டங்களை நிறைவேற்றவில்லை. அதனால் மக்களை சந்திக்க பயப்படுகிறார்கள். நமது கழகத் தலைவர் திராவிட மாடல் ஆட்சி நாயகர் தமிழக முதல்வர் எண்ணற்ற சாதனைத் திட்டங்களை தமிழக மக்களுக்காக நிறைவேற்றியுள்ளார். அதனால் நாம் நெஞ்சை நிமிர்த்தி பொதுமக்களைச் சந்தித்து வாக்கு கேட்கலாம் என்றார். இந்த ஊராட்சியில் இன்று ஒரே நாளில் மட்டும் 60 புதிய வாக்காளர்களை சேர்த்து இருக்கிறீர்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை சொல்லி இருக்கிறீர்கள் உங்களுக்கு என்னுடைய வாழ்த்துக்கள் இதுபோல ஒவ்வொரு கிளைகளிலும் புதிய வாக்காளர்களை சேர்க்கவேண்டும் என்றார். ஆலோசனை கூட்டத்தில் ஆத்தூர் தெற்கு ஒன்றிய அவைத்தலைவர் சிவக்குமார், பொருளாளர் தொப்பம்பட்டி கருப்பையா, துணைச் செயலாளர் கருத்த ராஜா, ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வசந்தகுமார் ,மாணவரணி அமைப்பாளர் சூர்யா ,துணை அமைப்பாளர் ராம்ராஜ், முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினர் முத்துமாரி சேகர், முன்னாள் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் வீரக்கல் யூஜின் ,மற்றும் ஏ ராமநாதபுரம் கிளை செயலாளர் கருப்பையா, வீரக்கல் மதன்குமார் பன்னீர்செல்வம் உட்பட திமுக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்



## கீழக்கரை கிராமத்தில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கபாடி போட்டி

அலங்காநல்லூர்.டிச.23-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள கீழக்கரை கிராமத்தில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் குட்டிய் மேக்கம்பட்டி,இடையபட்டி ஆகிய கிராமங்களை சேர்ந்த இளைஞர்கள் இணைந்து மாபெரும் கபாடி போட்டி நடைபெற்றது. இதில் மதுரை, தேனி, திண்டுக்கல், ராமநாதபுரம், சிவகங்கை, திருப்பூர், கோயம்புத்தூர், , உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களை சேர்ந்த அணியினர் போட்டியில் கலந்துகொண்டனர் இந்த போட்டி இரண்டு நாட்கள் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழக வெற்றிக் கழகத்தின் மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் விஜய் அன்பன் கல்லானை புறநகர் மாவட்ட செயலாளர் விஷால்கிருஷ்ணா,ஆகியோர்கலந்துகொண்டுவிளையாட்டு போட்டியில் வெற்றி பெற்ற அணியினருக்கு கோப்பை மற்றும் சான்றிதழ் ரொக்கபணம் ஆகியவற்றை வழங்கி வாழ்த்தினார்.தொடர்ந்து விருதுநகரை சேர்ந்த கபாடி விளையாட வந்திருந்த அணியினர் இப்பகுதியில் இரவு பேருந்து வசதி இல்லை தாங்கள் தங்கள் ஊருக்கு செல்ல வேண்டும் என்றும் தங்களை மதுரை மாட்டுத்தாவணி பேருந்து நிலையத்திற்கு அனுப்பி வைக்குமாறு மாநகர் மாவட்டச் செ யலாளர் விஜய்அன்பன்கல்லானையிடம், கேட்டுக்கொண்டனர் சற்றும் தாமதிக்காமல் தனது வாகனத்தில் ஏற்றி அவர்களைமாட்டுதாவணி பேருந்து நிலையத்தில் இறக்கி விட நிர்வாகிகளுக்கு அன்பு கட்டளையிட்டார். இதில்ஒன்றிய நி ர்வாகிகள் விஜய்ஹரிஷ், பேரூர் நிர்வாகி ரஞ்சித், உள்பட பலர் கலந்து கொண்டனர்



## திருப்பூர்பல்லடத்தில் “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு

திருப்பூர், டிச.23-

கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க,

வருகின்ற 29.12.2025 திங்கட்கிழமை அன்று, திருப்பூர் மாவட்டம், பல்லடத்தில், “வெல்லும் தமிழ்ப் பெண்கள்” தி.மு.க. மேற்கு மண்டல மகளிர் அணி மாநாடு நடைபெறுவதையொட்டி,இன்று மேடை, பந்தல் அமைத்தல் மற்றும் மாநாட்டு பணிகளுக்கான, கால்கோள் விழா நடைபெற்றதுஇந்நிகழ்வில் மேற்கு மண்டல பொறுப்பாளர் மாண்புமிகு அண்ணன் கூஷி.செந்தில் பாலாஜி அவர்கள், மாண்புமிகு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி துறை அமைச்சர் கழக துணை பொதுச்செயலாளர் அண்ணன் மு.பெ. சாமிநாதன் அவர்கள்,மாண்புமிகு வீட்டு வசதி மேம்பாட்டு துறை மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் அண்ணன் முத்துசாமி அவர்கள், மாண்புமிகு மனித வள மேம்பாட்டு துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ் அவர்கள், மத்திய மாவட்ட கழக செயலாளர் க.செல்வராஜ்விலிகி அவர்களும், வடக்கு மாவட்ட கழக பொறுப்பாளர் மாண்புமிகு மேயர் ந.தினேஷ்குமார் அவர்களும்,பல்வேறு மாவட்ட செயலாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டனர்.






■ தமிழ்நாடு அரசு அலுவலகம் ஒன்றியத்தின் ஏலகிரியில் மாநில அளவிலான முதல் நாள் பயிற்சி பட்டறையில் மாநில தலைவர் வெ.மகேந்திர குமார் முன்னுரை வழங்கிய பொழுது அருகில் மாநில, மாவட்ட, மேனாண், மற்றும் இளைஞர் அணி, மகளிர் அணி, தகவல் தொழில்நுட்ப அணி, இலக்கிய அணி. ஆகிய நிர்வாகிகள் அனைவரும் பங்கு பெற்று பயிற்சி ஆசிரியர்களால் பயிற்சி வழங்கிய பொழுது

## பெரம்பலூர் மாவட்டம்

# ஆஞ்சநேயர் கோவில் கிரிவல பாதையில் இயங்கும் கிரசர்கள்...

### சட்டப்படி நடவடிக்கை எடுப்பதாக இணை ஆணையர் ஞானசேகரன் தகவல்

பெரம்பலூர், டிச.23-

பெரம்பலூர் மாவட்டம், பாடாலூர் ஆஞ்சநேயர் கோயில் கிரிவல பாதையை மறித்து கிரசர்கள் இயங்கி வருவதாகவும், செட்டிக்குளம் செயல் அலுவலர் ஹேமாவதி, ஆஞ்சநேயர் கோவில் அன்னதான திட்ட உதவியாளர் திருநாவுக்கரசு மூலமாக மாதாந்திரம் கையூட்டு பெற்றுக்கொண்டு, கிரசர்கள் மீது நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்த்து வருவதாகவும், வில்முரசு, வில்வாய்ஸ் பத்திரிகைகளின் ஆசிரியரும், பூர்வீக தமிழர் குடி கட்சியின் நிறுவனருமான பன்னீர்செல்வம் என்பவரின் பத்திரிக்கை அலுவலகத்திற்கு புகார் மனு அனுப்பிருந்தனர்.

அதனடிப்படையில், வில்முரசு பத்திரிகை புலனாய்வு குழு, சம்மந்தப்பட்ட கோயில் கிரிவல பாதை முழுவதும் ஜி.பி.ஆர்.எஸ் ஆன்லைன் மூலம் ஆய்வு செய்ததில், புகார் மனுவில் உள்ள தகவல்கள் அனைத்தும் உண்மை என தெரிய வந்துள்ளது.

ஆய்வு செய்ததின் அடிப்படையில், கோயில் கிரிவல பாதையில் இயங்கும் கிரசர்கள் மீது நடவடிக்கை எடுத்திட வேண்டி பெரம்பலூர் மாவட்ட



**இணை ஆணையர் ஞானசேகரன்**

ஆட்சியருக்கு புகார் மனு அனுப்பியுள்ளார்.

அதன் பிறகும் நடவடிக்கை இல்லாத பட்சத்தில், தற்போது புவியியல் மற்றும் சுரங்கத்துறை அதிகாரிகள், இந்து சமய அறநிலையத்துறை அதிகாரிகள், மாசு கட்டுப்பாட்டு வாரிய அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர் என 10 உயர் அதிகாரிகளுக்கு வக்கீல் நோட்டீஸ் அனுப்பியுள்ளதாகவும், விரைவில் சென்னை உயர்நீதிமன்ற மன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாகவும் கூறப்படுகிறது.

இது சம்பந்தமாக ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா என இந்து சமய அறநிலையத்துறை திருச்சி இணை ஆணையர் ஞானசேகரனிடம் கேட்டபோது, கடந்த வாரம் பெரம்பலூர் இந்து சமய அறநிலையத்துறை தாசில்தார் தலைமையில், பாடாலூர் ஆஞ்சநேயர் கோவில் கிரிவல பாதை அளவீடு செய்யப்பட்டுள்ளது. இதன் அறிக்கை எனக்கு இன்னும் வரப்பெறவில்லை. அறிக்கை கிடைக்கப்பெற்ற பிறகு அளவீடு அறிக்கையின் அடிப்படையில், கோயில் கிரிவல பாதையில் இயங்கும் கிரசர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்.



## உடுமலை நகரில் அதிமுக மாவட்ட இளைஞரணி வர்த்தக அணி மாபெரும் மருத்துவ முகாம்

உடுமலை, டிச.23-

அ இ அதிமுக மாவட்ட இளைஞரணி வர்த்தக அணி சார்பாக மாபெரும் மருத்துவ முகாம் ரத்ததான முகாம் உதயக்குமார், வக்கீல் கண்ணன் ஏற்பாட்டில் நடைபெற்றது. உடுமலை நகரில் காமாட்சி அம்மன் கோவில் மண்டபத்தில் 21 12 2025 அன்று காலை அ இ அதிமுக மாவட்ட இளைஞரணி மற்றும் வர்த்தக அணி சார்பாக மாபெரும் மருத்துவ முகாம், ரத்ததான முகாம், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும் உடுமலை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே. ராதாகிருஷ்ணன் அவர்கள் துவங்கி வைத்தார். இதன் தொடர்ச்சியாக மக்கள் பணியாற்றிய 40 நபர்களுக்கு விருதுகள் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பழனி சுப்பிரமணி கலை மற்றும் கல்லூரி சி இ ஓ ஸ்வேதா சுப்பிரமணி அவர்கள் கலந்துகொண்டு விருது பெற்றார். இந்நிகழ்ச்சியில் அ இ அ தி மு க மாவட்ட துணை செயலாளர் சாஸ்திரி சீனிவாசன், உடுமலை நகர கழகச் செயலாளர் ஹக்கீம், குடிமங்கலம் ஒன்றிய கழகச் செயலாளர்கள் முருகேஷ், அன்பர்ராஜன், பிரனேஷ், சார்பு அணி மாவட்ட கழக செயலாளர்கள் எஸ்.எம். நாகராஜ்,ருத்ரேஸ்வரன், ஆறுமுகம், சரண்யா தேவி வனிதா, மதி சகுந்தலா எம். சி, சௌந்தர்ராஜன் எம்.சி, விஸ்வநாதன், விருகல்பட்டி பிரகாஷ், மளிகை செல்வம், சத்தியம் பாபு, ஆறுமுகம், பாஜக நகர தலைவர் பாலகுரு மற்றும் சித்த மருத்துவர்கள், கண் மருத்துவர்கள், பொது மருத்துவர்கள் கலந்து கொண்டார்கள்



■ தேனி மாவட்டம்,தேனிஅல்லிநகரம் நகராட்சிக்கு உட்பட்ட நாடார் சரஸ்வதிஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 4ஆவது புத்தகத் திருவிழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங்,தேனி பாராளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்செல்வன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணகுமார் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைத்ததைத் தொடர்ந்து, பள்ளி மாணவ, மாணவியர்கள் புத்தக அரங்குகளை ஆர்வத்துடன் பார்வையிட்டு, புத்தகங்களை வாங்கி சென்றனர்.



■ தேனி மாவட்டம், தேனிஅல்லிநகரம் நகராட்சிக்குட்பட்ட நாடார் சரஸ்வதி ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் 4ஆவது புத்தகத் திருவிழாவினை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ் ஜீத் சிங், தேனி பாராளுமன்ற உறுப்பினர்தங்கதமிழ்செல்வன், பெரியகுளம் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.சரவணகுமார் ஆகியோர் முன்னிலையில் திறந்து வைத்து, புத்தக அரங்குகளை பார்வையிட்டார்கள்



■ திண்டுக்கல்லில் ஜனவரி 7ந் தேதி முதலமைச்சர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிக்கான விழா மேடை, பந்தல் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று நடைபெற்றதுஇதில் பழனி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் திண்டுக்கல் கிழக்கு மாவட்ட செயலாளர் ஐ.பி.செந்தில்ககுமார்,மாவட்ட வருவாய்அலுவலர் ஜெயபாரதி மற்றும் அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்.

## புதிதாக சிங்காரக்கோட்டை ஊராட்சியை வழங்கியதற்காக கிராம மக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு நன்றி

சின்னாளபட்டி, டிச.23-

சித்தரேவு ஊராட்சியைப் பிரித்து புதிதாக சிங்காரக்கோட்டை ஊராட்சியை வழங்கியதற்காக கிராம மக்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து நன்றி தெரிவித்தனர். திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியத்தில் 22 கிராம ஊராட்சிகள் உள்ளன. இதில் சித்தரேவு மிகப்பெரிய ஊராட்சியாக இருந்தது. ஊராட்சி மன்றத்திற்கு வருவதற்கு ஊராட்சியைச் சேர்ந்த கிழக்கு மற்றும் வடக்கு பகுதி மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். பொதுமக்களின் நலன் கருதி ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்கள், சித்தரேவு ஊராட்சியை பிரித்து புதிதாக சிங்காரக்கோட்டை ஊராட்சியை அறிவிக்க



ஏற்பாடு செய்தார். இதற்கு பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு கிடைத்ததுடன் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கும் பாராட்டுகளும் கிடைத்தது. புதிதாக அறிவிக்கப்பட்ட சிங்காரக்கோட்டை ஊராட்சியில் ரெங்கராஜபுரம், நல்லாம்பிள்ளை, சாலைப்புதூர், சிங்காரக்கோட்டை, கார்கில் நகர், காந்திபுரம், ஒட்டுப்பட்டி, செல்லம்பட்டி, சங்காரெட்டிக்கோட்டை ஆகிய கிராமங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. மேற்கண்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் பொதுக்குழு உறுப்பினர் நெல்லூர் மலைச்சாமி அவர்களின் தலைமையில் அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களை நேரில் சந்தித்து சால்வை அணிவித்து தங்களின் நன்றியைத் தெரிவித்தனர். நிகழ்ச்சியின்போது திண்டுக்கல் கிழக்கு மாவட்ட பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் நடராஜன், அமைச்சரின் உதவியாளர் வத்தலகுண்டு ஹரிஹரன், கிழக்கு மாவட்ட திமுக துணைச்செயலாளர் ஆ.நாகராஜன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், பொதுக்குழு உறுப்பினர் அக்பர் மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் இல.கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட வர்த்தகர் அணி அமைப்பாளர் பொன்முருகன், மாவட்ட தொண்டரணி துணை அமைப்பாளர்கள் கும்மம்பட்டி விவேகானந்தன், பஞ்சம்பட்டி மணி, திண்டுக்கல் மாமன்ற உறுப்பினர் நெல்லை சுபாஸ், கிளைக்கழக செயலாளர்கள் சிங்காரக்கோட்டை முருகன், வி.எல்.ஆர் பாண்டியன், வழக்கறிஞர் சுந்தர்ராஜன், செல்லம்பட்டி ராஜாராம் ஜெகநாதன், ஒட்டுப்பட்டி ஐயப்பன், சாலைப்புதூர் நாகன், ரெங் கர ராஜபுரம் அய்யண்ணன், சங்காரெட்டிகோட்டை தியாகராஜன், திண்டுக்கல் 7வது வார்டு திமுக நிர்வாகிகள் நரசிங்கம், வீரபாண்டி உட்பட திமுக நிர்வாகிகள் பலர் உடன் இருந்தனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000